

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## யார் மறைவான வேடனின் கண்ணிக்கு தப்புவர்?

சங்கீதம்.91:3 கூறும் "வேடனுடைய கண்ணி" வானத்துப் பறவையின் கண்களுக்கு மறைவானது! தேவனுடைய பிள்ளைகளுக்கு, 'மறைவான பாவங்களை, சோர்வுகளைத்' தருவதற்கு இந்த வேடனாகிய சாத்தான், எப்போதும் துடித்து நிற்கிறான். 'திடீரென்று' நடந்த சம்பவத்திற்குப் பின்னால், காமவிகாரமோ அல்லது பகையோ அல்லது மனச்சோர்வோ.... ஆகிய மறைவான கண்ணியை, சத்துருவாகிய வேடன் வைத்துள்ளான்! விசுவாசிகளில் அனேகர் அவனது கண்ணிக்குத் தப்பிக்கவில்லை.....

வேடனின் மறைவான கண்ணியிலிருந்து, யார்தான் நம்மை தப்புவிக்க முடியும்? ஆம் "அவர் தப்புவிப்பார்!" (சங்.91:3). உண்மைதான், உன்னத மானவரின் 'மறைவிடத்தை' தேடி, அவரை தஞ்சம் அடைந்தவர்கள், தங்கள் அந்தரங்க பாவங்களும், மனச்சோர்வுகளும் தேவனுடைய வெளிச்சத்தில் கழுவப்பட்டு..... 'அவரே' அவர்களின் கன்மலையும், கோட்டையுமாய் மாறியபடியால்.... இந்த வேடனின் கண்ணியில் இவர்கள் அகப்படுவதில்லை! (சங்.91:1-3). எஞ்சியுள்ள 4 முதல் 16 வசனங்கள் வரை உள்ள "பாதுகாப்பான வாக்குதத்தங்கள்" அனைத்தும் 3-ம் வசனம் கூறும் வேடனின் கண்ணிக்குத் தப்பியவர்களுக்கே சொந்தம்!

*-tr*

பெட்டகம் 19 | ஜூலை 2017 | பரல்கள் 7



## சபை, கர்த்தரின் குடும்பம்!

'பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளும்' கிறிஸ்துவுக்குள் கட்டப்பட வேண்டும்.... அது, **பூலோகத்தில் காணும் பரலோக குடும்பம்** என வியக்கும் எபேசியர்.1:9,10; 3:14 வசனங்களை பாருங்கள்! கிறிஸ்துவுக்குள் நாம் பெற்ற பாவ மன்னிப்பு.... திவ்ய சுபாவம் என்பதைக் கடந்து **"ஒரே குடும்பமாய்" கட்டப்படும்** பாக்கியமே மகா மேன்மையானது! இதுவே, தேவனை நம் சொந்த பிதாவாய் அறிந்து மகிழும் புதிய உடன்படிக்கையின் புத்திர பாக்கியம்!

இயேசுவும், பரலோக குடும்பத்தை விட்டு வந்தபோது.... தன்னுடைய சீஷர்களுக்கு பிதாவைப் பற்றியும், பரிசுத்தாவியானவரைப் பற்றியுமே பேசிக்கொண்டே இருந்தார்! ஒரு குடும்பத்தின் அடிப்படையான உறவுகள் பற்றியே விளக்கிக்கொண்டிருந்தார். தான் பூமிக்கு வருவதற்கு முன்பாகவே, தமது தூதர்கள் மூலமாய், இந்த பூமியில் பரலோக உறவை வளர்த்தார்..... ஆம், யோசேப்பு, மரியாள், சகரியா, எலிசபெத் போன்ற வெகு சாமான்யமான மக்கள் மூலமாகத்தான் 'புதிய உடன் படிக்கையின்' வரலாறு உயிர் பெறுகிறது! அந்த உறவுகளில் உயிர் இருந்தபடியால், அந்த பாவி யாகிய மரியாள், தான் பாடுபட்டு சம்பாதித்த 'பரிமள தைலத்தை' இயேசுவின் சிரசில் ஊற்றவும், சீரேன் ஊரானாகிய யோசேப்பை அவருக்குப் பதிலாக சிலுவை சுமக்கவும், மகதெலேனா மரியாளை இருட்டோடே எழுந்து இயேசுவின் கல்லறை நோக்கிப் போகவும் செய்தது! இன்னும் ஆச்சரியம் என்னவென்றால், இயேசு உயிர்த்தெழுந்தபின்பு 'மறுதலித்து மனந்திரும்பிய பேதுருவைத்' தேடிப்போவதும், எம்மாவு சீஷர்களாடு நடப்பதும், களைத்து வந்த சீஷர்களுக்கு மீன் பொறித்து கொடுப்பதும்.... ஆஹா, கர்த்தரின் குடும்ப உறவுகளுக்கு தேவன் காண்பித்த முக்கியத்துவம் எத்தனை! எத்தனை! ஆம், இயேசு கட்டும் சபை, அதுபோன்ற "குடும்ப உறவு கொண்ட சபை" என்பதை அறிந்து, ஆண்டவரின் இருதயத்தை மகிழச்செய்யும்படி நமது ஜீவியம் இருப்பதாக!!

*-Ed*


**பரலோக பொக்கிஷங்கள்**

வருடசந்தா **ரூ.120.00** ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.100.00

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch

**Savings a/c no: 502087685** Ifsc code: IDIB000K150

(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!

சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

கடித தொடர்பு : **பரலோக பொக்கிஷங்கள்**

207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India

Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306, (H) 0452 - 2661177

Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, cfcindia.com/tamil

## 'நன்றி உள்ளவர்கள்' கிறிஸ்துவின் சபையில் நிலைத்திருப்பார்கள்!

"**கி**றிஸ்து சபையில் அன்புகூர்ந்து...... தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" என்ற ஆச்சரியமான வசனத்தை எபேசியர். 5:25-27 வசனங்களில் நாம் வாசிக்கிறோம்.

இயேசு தூரமாய் பரலோகத்தில் அமர்ந்து கொண்டு "நான் யாவரையும் அளவில்லாது அன்புகூருகிறேன்" என ஒரு செய்தியை அனுப்பவில்லை! ஆம், **அவர் வானத்திலிருந்து பூமிக்கு இறங்கிவந்து** நமக்காகத் தம் சொந்த ஜீவனையே கொடுத்துதான் அன்புகூர்ந்தார். இன்று நாமும் கூட இதேவிதமாய் நம்முடைய அன்பை சபைக்குக் காட்டிட வேண்டும்! வெறும் வார்த்தையினால் அல்ல...... சபையில் தேவன் வைத்திருக்கும் ஜனங்களுக்கு நம் சொந்த ஜீவனையும் இழந்து அன்புகூருவதாகும்!!

ஆம், தேவன் நம்முடைய ஸ்தல சபையில் வைத்திருக்கும் சகோதர சகோதரிகளுக்காக நம்முடைய சொந்த "சுய மரியாதை" "சுய கௌரவம்" "சுய உரிமைகள்" "சுய எதிர்பார்ப்புகள்"...... இன்னும் இது போன்ற **"சுயம்" உள்ளடங்கிய எல்லாவற்றையும் இழப்பதற்கு நாம் ஆயத்தமாயிருக்கிறோமா?** இவ்வாறு நாம் ஆயத்தமாயிருந்தால் மாத்திரமே, ஆண்டவராகிய இயேசு, நம்மோடு "ஒருமன ஆவி" கொண்டிருக்கவும், ஐக்கியப்படவும் முடியும்!

இன்று அனேக விசுவாசிகள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி அடையாதிருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் என்ன தெரியுமா? கேளுங்கள்: "இவர்கள் தாங்கள் சபையிலிருந்து பெற்றுக்கொண்ட உசிதமான நன்மைகளுக்கு **நன்றியுள்ளவர்களாய் இல்லை!**" என்ற காரணமேயாகும். இன்று சபையிலிருந்து வழி விலகிப்போனவர்கள் யார் தெரியுமா? "பல வருடங்களாய் சபையில் தாங்கள் பெற்ற எல்லா நன்மைகளுக்கும் முற்றிலும் நன்றியற்றவர்களாய் இருந்தவர்களே" சபையை விட்டு வழி விலகி வீழ்ச்சியடைந்திருக்கிறார்கள்.

இன்றும், இந்த பூமியில், தன்னுடைய சரீரமாயிருக்கும் சபையின் நடுவில் ஆண்டவர் வீற்றிருக்கிறார்! இன்று அவருடைய சரீரத்திற்கு (சபைக்கு) நாம் கொடுக்கும் மதிப்பின் மூலமாகவே நம் நன்றியையும் காண்பித்திட முடியும். இவ்வாறு சபையின் மதிப்பை உணர்ந்து நீங்கள்

*நன்றி செலுத்திடவில்லையென்றால், நஷ்டம் சபைக்கு அல்ல, நீங்கள் தான் பெரும் நஷ்டம் அடைவீர்கள்!!*

**இன்று தேவன் யாரை அளவில்லாமல் ஆசீர்வதித்திருக்கிறார் தெரியுமா? யாரெல்லாம் சபையை மதித்து, சபையிலிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக நன்றியுடையவர்களாய் இருந்தார்களோ, அவர்களையே தேவன் அபரிதமாய் ஆசீர்வதித்திருக்கிறார்!**

*இவ்வுலகத்தின் தீமையிலிருந்து நம் பிள்ளைகளை சபை பாதுகாத்திருக்கிறதே...... இதற்காககூட நாம் எத்தனை அதிகம் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்! என்னுடைய எல்லா நான்கு மகன்களும் சபையிலிருந்த வாலிபர்கள் மத்தியில்தான் வாழ்ந்து வந்தார்கள். இத்தனை பெரிய சிலாக்கியத்திற்காக என் நன்றியை தேவனுக்கு செலுத்திட எனக்குப் போதுமான வார்த்தையே இல்லை! சபையிலிருந்த வாலிப சகோதரர்கள் பூரணமற்றவர்கள்தான். அவர்களிடம் அனேக பலவீனங்கள் இருந்தன. இருப்பினும்* **அந்த சகோதரர்கள் உண்மையுள்ளவர்களாய் இருந்தபடியால்,** *அவர்கள் மூலமாய் என்னுடைய நான்கு மகன்களும் கிறிஸ்தவ ஜீவியத்தில் சொல்லிமுடியா அளவிற்கு ஊக்கம் பெற்றார்கள்! இவ்வலிய செயலை பெற்றோர்கள் மாத்திரமே நிறைவேற்றிட முடியாது. ஆம், நம்முடைய பிள்ளைகளை தேவபக்தியில் வளர்த்திட சபையில் உத்தமமாய் வாழ்ந்திடும் சகோதர சகோதரிகளின் உதவி நமக்கு மெய்யாகவே தேவையாய் இருக்கிறது!!*

**துரதிருஷ்டவசமாய் இன்று அனேக விசுவாசிகள் தங்கள் ஸ்தல சபையைவிட்டு** *வேறிடங்களுக்குச் செல்லும்போதுதான் தங்கள் சபையின் மதிப்பை உணருகிறார்கள்! ஒரு சமயம், தாவீது தன் சொந்த ஊரான பெத்லகேமின் கிணற்று தண்ணீரின் மீது ஆவலாய் இருந்தான் என வாசிக்கிறோம் (2 சாமுவேல் 23:15). ஏனெனில் அந்த கிணற்று தண்ணீரின் ருசி வேறு எந்த இடத்திலுள்ள தண்ணீரைக்காட்டிலும் விசேஷித்த ருசியுடையதாய் இருந்தது! இதைப்போலவே இன்று அநேகர், வேலை விஷயமாய் வேறு ஊர்களுக்கு மாற்றுதலாகிப் போகும்போது அல்லது வேறு தூரமான தேசத்திற்குப் போகும்போது மாத்திரமே தங்கள் ஸ்தல சபையின் ஐக்கிய கூட்டங்களுக்காக ஏங்கி நிற்கிறார்கள்! இவ்வாறெல்லாம் உங்களுக்கு சம்பவிக்காமல்,* **இன்றே சபையை மதித்து** *சபையில் உள்ள சகோதர சகோதரிகளுக்காய் நன்றியுள்ளவர்களாய் இருந்து விடுங்கள்!!*

*உங்கள் ஸ்தல சபையில் உள்ள சகோதர சகோதரிகளின் மதிப்பை உணர்ந்திட உங்களுக்கு ஏன் கஷ்டமாய் இருக்கிறது? இதற்கான காரணத்தை நீங்கள் கூறும்போது, “அவர்களிடம் ஏராளமான*

*குறைகள் இருக்கிறதே!" என நீங்கள் கூறலாம்.*

*கண்களில் ஏதாகிலும் பிரச்சனை வரும்போது, ஜனங்கள் தங்கள் கண்களுக்கு முன்பாக ஏதோ கருப்புப்புள்ளி எப்போதும் இருப்பதைப் போல் காண்பார்கள்! இதனிமித்தம் இவர்களின் கண்களுக்கு முன்பாக எல்லா சகோதர சகோதரிகளின் முகங்களும் கறைபட்டது போலவே தோன்றும். இதை வாசிக்கும் உங்கள் நிலையும் இப்படித்தான் என்றால், பிரச்சனை சகோதர சகோதரிகளிடமல்ல...... உங்கள் சொந்த கண்ணில்தான் இருக்கிறது!! உங்கள் சொந்த கண்களிலேயே புள்ளிகள் இருக்கிறபடியால், பிறருடைய முகங்களில் கறைகளைப் பார்க்கிறீர்கள். இதுபோன்ற உங்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ளட்டும்: ஆம், சகோதர சகோதரியே,* **"உங்கள் கண்களை இயேசு சுகப்படுத்தி னாலொழிய உங்கள் பார்வை ஒருக்காலும் தெளிவடையாது!"**

*இதற்கு இயேசுவையே மாதிரியாய் நோக்குங்கள். இயேசு தன்னுடைய சீஷர்களின் உத்தம சிநேகத்தை எவ்வளவு மதித்தார் என்பதை சுவிசேஷத்தில் கண்டிருக்கிறீர்களா? ஒரு சமயம் அவர் சீஷர்களிடம் கூறும்போது, "நீங்கள் சிதறுண்டு என்னைத் தனியே விட்டுவிடும் காலம் வரும். ஆனால் நான் தனித்திரேன். பிதா என்னுடனேகூட இருக்கிறார்" (யோவான் 16:32) எனக் கூறினார்.*

பார்த்தீர்களா, பிதாவின் சமூகத்திலிருந்த இயேசுவுக்கு சீஷர்கள் தன்னோடு இருக்க வேண்டியது அவருக்கு அவசியமில்லைதான்! இருப்பினும் லூக்கா 22:28-ம் வசனத்தில் இயேசு என்ன சொன்னார் தெரியுமா? "எனக்குநேரிட்ட சோதனைகளில் என்னோடே கூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே!" என தன் நன்றியை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

*இந்த இயேசு மகிமையின் கர்த்தர்...... அவரோடு துணை நிற்க யாரும் அவருக்குத் தேவையில்லை...... ஆயினும், சீஷர்களின் உத்தம சிநேகத்தை இயேசு எவ்வளவாய் மெச்சிக் கொண்டார் பார்த்தீர்களா!! சீஷர்களிடம் இயேசு கூறியதை கீழ்கண்டவாறு விவரித்துக் கூறலாம், "என் அருமை சீஷர்களே, உங்கள் பழைய யூத முறைமைகளிலிருந்து வெளியேறி 'பழைய திராட்சரசத் துருத்தியை' எவ்வளவு தைரியமாய் விட்டு விட்டீர்கள்! மணவாட்டியின் ஆவிக்கும், வேசியின் ஆவிக்கும் உள்ள வித்தியாசத்தை தெளிவாய் கண்டு அவைகளை விட்டு விட்டு...... என்ன விலைக்கிரயமானாலும் அதைச் செலுத்துவதற்கு ஆயத்தமாய் என்னோடு சேர்ந்து உறுதியாய் நின்ற உங்களுக்கு ஒப்பாய் வேறு யாருண்டு!!" என்றே பாராட்டி அகமகிழ்ந்தார்.*

*கடைசிநாளில், அன்று சீஷர்களிடம் கூறிய இதே வார்த்தைகளை*

*இயேசு நம்மிடமும் கூறுவாறென்றே நான் நம்புகிறேன். ஆம், நாம் அவர் நிமித்தம் வெட்கமடையாமல் அவரோடு இணைந்து நின்றதையும், அவர் நம்மை வைத்திருக்கிற சபையை நேசித்ததையும், நம்மையே சபைக்காக ஒப்புக்கொடுத்ததையும்...... இன்று எத்தனையோ பேர் சபையை குறைகூறிச் சென்றதைப் போல நாம் இல்லாதிருந்ததையும்.... குறிப்பிட்டு, இயேசு நிச்சயமாய் நம்மை மெச்சிக்கொள்வார்!!*

*அன்பான சகோதர சகோதரிகளே, நாமும் நம்முடைய பிள்ளைகளும் சபையில் பெற்றுக்கொண்ட சொல்லி முடியா பாதுகாப்பிற்காக நன்றியுள்ளவர்களாய் இருக்கக்கடவோம்!*

*அன்பார்ந்த வாலிபர்களே, சபையின் கண்டிப்பான பரிசுத்தத்தின் தரம், நீங்கள் உலகத்தில் வழிவிலகி உங்களை நீங்களே அழித்துக் கொள்வதிலிருந்து எவ்வளவாய் பாதுகாத்துக் கொண்டது என்பதை, நீங்கள் 'அந்நாளில்' ஆண்டவருக்கு முன்பாக நிற்கும்போதுதான் தெளிவாய் உணருவீர்கள்!*

*கடைசிநாளில், நீங்கள் சபையில் பல வருடங்களுக்கு முன்பாகவே கேட்ட சத்தியங்கள், பிற்கால ஆபத்துக்களிலிருந்து உங்களை எவ்வளவாய் பாதுகாத்துக் கொண்டது என்பதையும் தெளிவாய் காண்பீர்கள். உங்கள் பிள்ளைகள், சபையில் கேட்ட சத்தியங்கள் அவர்களைப் பல ஆவிக்குரிய வீழ்ச்சிகளிலிருந்தும் ஆபத்துக் களிலிருந்தும் எங்ஙனம் காத்துக் கொண்டன என்பதையும் ஆண்டவர் அந்நாளில் உங்களுக்குத் தெரியப்படுத்துவார்!*

*இவ்வாறெல்லாம் ஏராளமான ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்த போதும், இன்று மிகவும் கொஞ்ச பேர்களே சபையை மதித்து அதற்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கிறார்கள்!*

*நீங்கள் உங்கள் ஜீவியத்தில் "பிறரை ஆசீர்வதிக்கும்" உன்னத வளர்ச்சிக்குள் வளரவிரும்புகிறீர்களா? அப்படியானால், நீங்கள் முதலாவது, ஆண்டவர் உங்களுக்காக செய்த யாவற்றிற்கும் நன்றியுள்ளவர்களாய் இருங்கள்!*

**"ஏதோ ஒரு சபையில் இருக்கிறோம்" என தேவன் உங்களுக்குத்தந்த சிறந்த சபையை மெத்தனமாய் எண்ணிவிடாதிருங்கள்!!**

*இன்று நம்மில் அநேகர், "பெற்றோர்கள் மரித்த பின்பு அவர்களுடைய அருமையை உணரும்" பிள்ளைகளைப் போலவே தான் இருக்கிறோம்! இவ்வாறு காலம் கடந்து போவதற்கு முன்பாக "இப்போது" சபையில் உள்ள ஒவ்வொருவருக்காகவும்*

*நன்றியுள்ளவர்களாய் இருப்பதற்கு ஆண்டவர் நம் யாவருக்கும் உணர்வுள்ள இருதயத்தைத் தருவாராக!!*

*– சகரியா பூணன்*

## பிரிவினை தந்தவர்களுக்கு 'ஒப்புரவாகும்' ஐக்கியத்தை தந்தேன்!

**தே***வன் எனக்குத் தந்த எல்லைக்குள் நான் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தேன்! அந்த எல்லைக்குள் 'எல்லாம் சுமூகமாயிருக்கிறதா?' என்பதை வைத்து அல்ல! மாறாக,* **தேவன் எனக்குத் தந்த எல்லையில், எவ்வளவு தீமை நடந்தாலும், அது அவர் தந்த எல்லை** *என்பது மாத்திரமே எனக்கு மகிழ்ச்சியாயிருந்தது. என் வீட்டிலிருந்த அவர்கள், எப்படியாவது எனது மகிழ்ச்சியை அபகரிப்பதில் குறியாயிருந்ததைக் கண்டு, நான் ஆச்சரியப்பட்டேன். என் மனதின் இளைப்பாறுதலை குலைப்பதற்கு, இப்போது அவர்கள் எனது பக்தியான அன்பு தந்தைக்கு விரோதமாகப் பேசத்தொடங்கினார்கள்! அது மாத்திர மல்லாமல், பக்தியுள்ளவர்கள் என நான் மதித்து வைத்திருந்த உறவினர்களையும், ஆவிக்குரிய நண்பர்களையும் தீது பேசத் தொடங்கினார்கள். என்னில் எழுந்த போராட்டம் "ஆண்டவரே, என்னை அவர்கள் எப்படி வேண்டுமானாலும் பேசட்டும். ஆனால், அன்பும் பக்தியும் கொண்ட என் தகப்பனைப் போன்ற பிரியமான வர்களை இவ்வாறு பேசுவது நியாயமல்லவே" என நான் தீர்மானித்து அவர்கள் தீது பேசிய அனைத்தையும் மறுத்தேன். நடந்தது என்னவென்றால், அவர்களுடைய ஆத்திரம் இன்னமும் அதிகமாய் என் மீது விழுந்தது. வீட்டிற்கு வருகிற யாராகிலும், என் தந்தையைப் பற்றியோ அல்லது பக்தியுள்ள என் உறவினர்களைப் பற்றியோ ஏதாவது குறை பேசினால்..... 'அவர்கள் பேசிய அனைத்தும் உண்மையென' சிரித்து மகிழ்ந்தார்கள். என்னிடம் பக்தி அடிப் படையில் நட்பு கொண்ட யாரையும், அவர்கள் முகம் கொடுத்து வரவேற்றதில்லை! ஒருசமயம், நான் மிகவும் மதிக்கத்தக்க பக்தியான உறவினர் என்னுடைய மாளிகைக்கு என்னைக் காண வந்தபோது, அவர்களுக்கு ஏதோ மறுப்பு கூறி உள்ளே விடாமல் அனுப்பி விட்டார்கள். அதைக் கேள்விப்பட்டு நான் மிகவும் உள்ளம் பதறினேன்! ஒரு முறை, என்னிடம் ஒருமுறை கூட பழகாத, என்னை அறியாத ஒருவர் என் மாளிகைக்கு வந்தபோது, அவர்களிடமும் என்னை தூஷித்தார்கள். புதிதாய் வந்த அவர்களோ ஆச்சரியப் பட்டார்கள்! பின்பு மாளிகைக்கு வந்த நபர்கள் என்னைக் கண்டபோது "இளவரசி, நாங்கள் யாரோ உங்களுக்குத் தெரியாது. ஆனால், உங்களைக் குறித்தும் உங்கள் வீட்டாரைக் குறித்தும் எங்களிடம் தீது பேசியதைக் கேட்டு நாங்கள்*

வருந்துகிறோம்! நீங்கள் மனம் தளர்ந்து விடாதீர்கள்" என கூறிச் சென்றார்கள்.

**இவ்வாறெல்லாம், "பக்தியான என் குடும்பத்திற்கும், உறவினர்களுக்கும் விரோதம் செய்து பேசிய வார்த்தைகள்" எனக்கு பாதிப்பு ஏற்படாதபடி தெய்வ அன்பு என்னை காத்துக்கொண்டது!**

யாதொரு இவ்வித சூழ்நிலையிலும் என்னை நியாயப்படுத்தி பேசுவதற்கும், தெய்வஅன்பு என்னை அனுமதிக்கவில்லை. இவ்வாறெல்லாம், எனது மாமியாரும் பணிப்பெண்களும் சேர்ந்து எனக்கு துன்பம் செய்ததை என் கணவரிடம் புகார் சொல்ல நான் செல்லவில்லை. நான் திருமணமாகி முதல் வருடத்தில், சற்று பதட்டம் அடைந்து என் கணவரிடம் பல புகார்கள் செய்திருந்தேன். அந்த ஒரு வருட காலங்கள், தேவனை நான் நெருக்கமாய் சந்திக்கத் தவறிய காலங்கள். ஆ, அந்த ஒரு வருடத்திற்குப் பிறகு, சிலுவையின் பாதையில் என்னிலே பெரிய மாற்றங்களை தேவன் செய்துவிட்டார்!

திடீரென்று சில சமயங்களில், என் கணவரும் அவரது தாயார் அல்லது எனது மாமியாரும் மிக மோசமாய் ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்து கொள்வார்கள். நான் தனியே இருக்கும்போது என் மாமியார், என்னுடைய கணவர் எவ்வளவு மோசமாய் நடந்து கொண்டார் என குறை கூறினார்கள். மற்றொரு தனிமையான நேரத்தில் என் கணவர் என்னிடம் வந்து அவருடைய தாயார் அல்லது எனது மாமியாரை பற்றி கோபமான புகார்களை கூறினார்கள். இவ்வாறு ஒருவருக்கொருவர் புகார் கூறிய நேரத்தில், ஒருவரைக் குறித்து மற்றொருவர் சொன்ன புகார்களை நான் ஒருபோதும் தெரிவித்தது இல்லை! மனுஷீகமாய் கூற வேண்டுமென்றால் இதுபோன்ற சம்பவங்களை 'எனக்கு ஆதாயமாய்' நான் மாற்றியிருக்க முடியும். அதன் மூலம் தேவன் நியமனம் செய்த இடுக்கமான வழியிலிருந்து என்னை நானே தப்புவித்திருக்க முடியும். இதற்கு மாறாக, கிறிஸ்துவின் அன்பில் அவர்களை ஒருவருக்கொருவர் ஒப்புரவாக்கிட என்னால் இயன்ற அனைத்தையும் செய்தேன்! ஒருவருக்கொருவரிடம் இருந்த நன்மை யானவைகளை மாத்திரம் நான் எடுத்துக்காட்டி, அவர்கள் இருவரும் மகிழ்வுடன் மீண்டும் சினேகிதர்களாய் மாறினார்கள்! அவ்வப்போது, சம்பவித்த இந்த அனுபவங்கள் மூலமாய், **இருதிறத்தாரை ஐக்கியப் படுத்துவதே கிறிஸ்துவின் பண்பு** என்பதை விளங்கிக் கொண்டேன். இதில் மிகவும் நூதனம் என்னவென்றால், என் மாமியாரும் என் கணவரும் நல்ல சமரச நிலைக்கு வந்தவுடன் 'மீண்டுமாய்' என்னைப் பகைத்து, போர்த்தொடுத்தார்கள்!!

– மேடம் குயான்

## மாற்றங்கள் ஏற்படுத்தாத இரட்சிப்பு, இரட்சிப்பு அல்ல!

***18*** - வது நூற்றாண்டில் தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப் பட்ட மாந்தர்களில் ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்தும் ஒருவராவார்! அநேக பிரசங்கிகளுக்கு உள்ள பிரச்சனை என்னவென்றால், அவர்களுக்கும் வீதியில் செல்லும் சாதாரண மனுஷனுக்கும் இடையில் தோன்றும் நடுச்சுவரே ஆகும். ஆனால் **விக்கிள்ஸ்வொர்த்தோ வெகு சாதாரண மனிதனாய்** இருந்தார். பிளம்பர் வேலை பார்த்துக்கொண்டிருந்த அவரது கைகள் தூசி படிந்த கரடு முரடாகவே எப்போதும் காணப்பட்டது. தன்னுடைய பிளம்பர் பணியில், உண்மை யுள்ளவராய் இருந்து கடுமையாய் பிரயாசப்பட்டவர். அவரைக் குறித்து பொது ஜனங்கள் "**மனுஷர்களுக்குள் மனுஷனாய்**" இருந்தவர் என்றே கூறி மகிழ்ந்தார்கள்!

"சுவிசேஷ மிஷன்" ஸ்தாபகராய் விக்கிள்ஸ்வொர்த் இருந்தார். ஒரு சமயம், **பிராட் போர்டு** நகரத்திலிருந்த **பெர்ரி** என்ற ஒரு மனிதன் அரசாங்க உத்தியோகத்தில் குற்றவாளிகளை தூக்கிலிடும் பணியைச் செய்தார். பெர்ரியைப்போல் ஒரு துஷ்டனை காண இயலாது. அவர் தனது பணியின் கடைசி எட்டு வருடங்கள் **ஏராளமான குற்றவாளிகளை தூக்கிலிட்டு** பணியிலிருந்து ஓய்ந்தார். பிராட்போர்டில் உள்ள துராகிதமான மனிதன் கூட பெர்ரியிடம் பேச தயங்குவார்கள். ஏனென்றால் அவன் அவ்வளவு கொடூரமும் கெட்ட வார்த்தைகளும் பேசினான்.

பெர்ரி பிறரை தூக்கிலிடும் பணியிலிருந்து ஓய்ந்த பிறகும், அவர் தூக்கிலிட்ட கைதிகளை பற்றிய சிந்தைகள் அவருடைய மனதை இரவும் பகலும் வாதித்தது. அவரது ஓய்வு நாட்கள் கொடிய துக்க நாட்களாய் மாறியது. தன்னை சித்திரவதை செய்த சிந்தைகளிலிருந்து அவர் விடுபட முடியாமல், தன்னை **தற்கொலை செய்து** மாய்ந்துக் கொள்ள முடிவு செய்தார். பிராட்போர்டு ஸ்டேஷனிலிருந்து கிளம்பும் ரயிலில் ஏறி, அதற்கு எதிர்புறமாய் வரும் ரயிலுக்கு முன்பாக விழுந்து தன்னை மாய்த்துக்கொள்ள தீர்மானித்துவிட்டார். தன்னை இம்சித்த வாழ்விலிருந்து விடுதலை பெறுவதற்கு அது ஒன்றே வழி என தீர்மானித்தார்!

ஸ்டேஷனில் தனியாய் நின்ற பெர்ரியிடம் ஒரு சகோதரன் நெருங்கி வந்தார். பெர்ரியைப் பார்த்து "ஸ்டேஷன் அருகிலுள்ள சுவிசேஷ மிஷனில் ஒரு கூட்டம் நடக்கப் போகிறது. அந்த கூட்டத்தில் இறைபக்தி கொண்ட ஊழியன் **விக்கிள்ஸ்வொர்த்** பேசுகிறார். நீங்கள்

வந்து பாருங்கள். உங்கள் வாழ்வில் நிச்சயமாய் மாற்றம் உண்டாகும்" என அழைத்தார். அவர் கூறிய வார்த்தைகள் பெர்ரிக்கு மிகுந்த அதிர்ச்சியை தந்தது.

**தான் வாழ்வை முடிக்கச் செல்லும் இந்த தருணத்தில் 'உங்கள் வாழ்க்கை மாறும்' என்ற அழைப்பை பெர்ரியால் மறுக்க முடியவில்லை!**

தன்னை மாய்த்துக் கொள்ளும் எண்ணத்தை ஒதுக்கி வைத்து விட்டு, அந்த மாலை கூட்டத்திற்கு உடனே பயணமானார். கூட்டத்தில் விக்கிள்ஸ்வொர்த் பேசிய பிரசங்கத்தை கேட்டு, தன் பாவத்தினிமித்தம் ஆழமாய் உணர்வடைந்த பெர்ரி 'ஓ' என மார்பில் அடித்து அழுது புலம்பினார். குளிரான அந்த கூட்ட அரங்கில் கண்ணீரும் வியர்வையும் பெர்ரியின் சட்டையை நனைத்தது, அந்த உஷ்ணம் பெர்ரியின் சட்டையிலிருந்து ஆவியாய் பறந்து சென்றது. அவரிடம் வந்த விக்கிள்ஸ்வொர்த், அவரது ஜெபத்தை தடைசெய்யாமல் விட்டுவிட்டார். சுமார் 2 1/2 மணிநேரம் ஜெபித்த பெர்ரி, **தன் எஞ்சிய வாழ்க்கையை தேவனுக்கென்று முற்றிலுமாய் சரணடைந்தார்.** அவரோடு பேசிய விக்கிள்ஸ்வொர்த், ஆண்டவரை நோக்கி "இந்த ஆத்துமாவை குறித்து நான் என்ன செய்ய வேண்டும்?" என கேட்டார். அதற்கு தேவன் "இவனை அப்படியே விட்டுவிடாதே! அவனோடு சேர்ந்து நீயும் அவன் வீட்டிற்குச் செல்" என கட்டளையிட்டார். மிகுந்த மகிழ்ச்சியுடன் விக்கிள்ஸ்வொர்த் பெர்ரியின் வீட்டு வாசலை அடைந்தவுடன், பெர்ரி தன் மனைவியைப் பார்த்து "தேவன் என்னை இரட்சித்து மீட்டுக்கொண்டார்" என அழுகையோடு கூற, அதற்கு அவரது மனைவியும் ஆனந்த கண்ணீருடன் ஆண்டவரை ஸ்தோத்தரித்தாள். அவளும் தன் ஜீவியத்தை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தாள்! விக்கிள்ஸ்வொர்த் பெர்ரியின் வீட்டிற்கு சென்றதினிமித்தம், பெர்ரியின் மனைவியும் இரட்சிப்பை கண்டடைந்தாள்.

**சில மணி நேரங்கள் தங்கியிருந்த விக்கிள்ஸ்வொர்த் அந்த வீடே கிறிஸ்துவின் பிரசன்னத்தால் கலகலப்பாய் மாறியதைக் கண்டார். அந்த வீட்டிலிருந்த பூனை கூட வீட்டில் ஏற்பட்ட மாற்றத்தை உணர்ந்து மகிழ்ச்சியோடு, துள்ளிக்குதித்ததை பார்த்து தேவனுக்கு நன்றி செலுத்தினார்!**

பிற்காலங்களில் "தூக்கிலிடும் கொடுமையை அகற்றுக!" என்ற இயக்கத்திற்கு பெர்ரி தலைமை தாங்கி அந்த கொடிய சட்டத்தை மாற்றுவதற்கு ஒரு கருவியானார்!

– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

## ஆதி பெந்தெகொஸ்தே 'அக்கினிமய' தாசர்கள் எங்கே?

**அ**ப்போஸ்தலனாகிய பவுலை சற்று சீர்தூக்கிப் பாருங்கள்! அபிஷேகத்தின் வல்லமையால் நிறைந்த அவர் 'ஆசியா மைனர்' தேசத்தையே அசைத்து விட்டார்! தூய ஆவியின் பிரசன்னத்தால் சந்தைவெளியில் சலனத்தையும் சிற்றாலயங்களில் கலக்கத்தையும், ராஜ அரண்மனைக்குள்ளும் தீவிர முழக்கமிட்டார்! அவருடைய இருதயத்தில் பீறிட்ட உலகத்திற்கு எதிரான முழக்கமே அவருடைய உதட்டிலும் தொனித்தது. கம்யூனிச தலைவர் லெனின் கூறிய "**சத்தியத்திற்கு மாத்திரமே பிடிவாதம் உண்டு!**" என்ற வாசகம் அந்நாட்களில் மிகவும் பிரசித்தமானது. பவுல் கிறிஸ்துவுக்காக சாதித்த அனைத்தும் இந்த வாசகத்தை 'உயிரோட்டம் உள்ளதாய்' மாற்றியிருக்கிறது. இதற்கு நேர்எதிர்பதமாய் இருப்பதுதான், 'சமரசத்திற்கு உலகத்தோடு கைகொடுக்கும்' இன்றைய கிறிஸ்தவ சந்ததி! நகரங்களுக்குச் சென்று பிரசங்கித்த வெறும் பிரசங்கியாய் இல்லாமல், அவர் சென்ற நகரங்களை அசைத்தவராயுமிருந்தார். அதே வேளையில் தெருக்களில் உள்ள எளிய வீடுகளுக்குச் சென்று 'கதவைத் தட்டி' ஆத்துமாக்களை சந்தித்து ஜெபித்தவராயுமிருந்தார்.

அன்று கூலிக்காக எந்த வேலையும் செய்யும் பையன்கள் உண்டு! இன்றோ, கூலி பெறுவதற்காகவே ஊழியம் செய்யும் மாந்தர்கள் பெருகி விட்டார்கள். ஒருமுறை, ஒரு புகழ்பெற்ற சுவிசேஷகரை ஒரு வாரத்திற்கு **500 டாலர் என காணிக்கை** பேசி நான்கு வாரங்களுக்கு 2000 டாலர் வாங்கிக்கொள்ள கேட்டார்கள். ஆனால் இந்த ஒப்பந்தம் 'குறைவான பணம்' எனக்கூறி அந்த புகழ் பெற்ற சுவிசேஷகர் மறுத்து விட்டர். இதை விவரித்துக் கூறிய ஒரு ஊழியர் "இவர்கள் ஒப்பந்த பணம் அதிகம் இருந்தால் ஆத்துமாக்களுக்காக கண்ணீர் விடுவார்கள்! ஆகிலும் யூதாஸை போன்ற இந்த ஊழியர்களின் கண்ணீர்...... தங்களின் யூதாஸின் வழி முறைக்காக காலம் கடந்து கண்ணீர் வடிப்பார்கள்" எனக் கூறினார்.

இன்று சபையில் உள்ள ஜனங்கள் பெலஹீனப்பட்டு இருப்பதற்கு காரணம், பிரசங்கபீடங்கள் விலைபேசப்படுவதே ஆகும்!

எழுப்புதலும் எழுப்புதலை கனலாக்கும் பிரசங்கங்களும் உருவாகுமிடம் "தேவனுக்கு முன்பாக சிந்தும் கண்ணீர்" என்பதை நான் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன். பிரசங்கிக்கும் சகோதரர்களே, கிறிஸ்தவத்திற்கு ஏற்பட்ட அவமானத்தைக் கண்டு, நாம் வெட்கமடையாதிருப்பது நியாயம்தானா? நம் கண்களில் கண்ணீர்

வராதிருப்பதைக் கண்டு நாம் அழ வேண்டாமா? தாழ்மையுள்ள ஊழியர்கள் நம்மிடம் இல்லையே என கண்டு, தரைமட்டும் தாழ்பணிந்து நாம் ஊழியம் செய்ய வேண்டிய நேரமல்லவா? கிறிஸ்துவின் இதய பாரம் நம் நெஞ்சில் இல்லையே என துயரமடைய வேண்டிய காலமல்லவா? இந்த கடைசி நாட்களில் 'தனக்கே வெற்றி' என பிசாசானவன் உலாவி வருவதைக் கண்டு நமக்கு கோபம் வரவில்லையே என நம்மீது கோபம் கொள்ள வேண்டிய காலமல்லவா? இந்த உலகம் நம்மை விரோதித்து சிலுவையில் அறையாமல் நம்மை அன்புகூர்ந்து சமரசம் செய்து கொண்டதைக் கண்டு, ஆத்திரம் அடைந்து நம்மையே சிலுவையில் அறைய வேண்டிய காலமல்லவா?

**பெந்தெகொஸ்தேயின் அர்த்தம் துன்பத்தின் சிகரம்! ஆனால், இக்காலத்தில் நம்மை சுற்றி ஓர் சொகுசு வாழ்க்கையே வைத்திருக்கிறோம். பெந்தெகொஸ்தேயின் அர்த்தம் ஆத்துமாக்கள் மீது அடைந்திடும் பாரம்! ஆனால் நாமோ சுய - அன்பில் இலகுவாயிருக்கவே விரும்புகிறோம்!**

பெந்தெகொஸ்தேயின் அர்த்தம் சிறைச்சாலைக்கும் ஆயத்தம்! ஆனால் நாமோ, கிறிஸ்துவுக்காக செல்லும் சிறைச்சாலையை தவிர்த்து வெளியே நின்று செய்ய முடிந்ததை மாத்திரம் செய்கிறோம். ஒருவேளை பெந்தெகொஸ்தேயின் ஜீவியத்தை நாம் மீண்டும் வாழ துணிந்தால், நம்மில் அநேகர் துன்பத்தின் சிறைக்குள் செல்ல வேண்டியிருக்கும்! இன்று இழிநிலைக்குள் சென்றிருக்கும் பெந்தெகொஸ்தே சபையினரை குறிவைத்து நான் பேசவில்லை.... அது என்னுடைய வேலையுமில்லை! நானோ ஆதி நிலையில் பற்றி எரிந்த பெந்தெகொஸ்தே அக்கினி எங்கே? என்றே, தவிப்புடன் கேட்கிறேன்.

– *லியோனார்டு ரேவன்ஹில்*

---

## கிறிஸ்துவின் சபை 'வீணான சபை' என மாறுவது கூடாது!

'**நீ**ங்கள் சபையிலே கூடி வந்திருக்கும்போது உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன். தேவனுடைய சபையை அசட்டைப் பண்ணுகிறீர்களா?' என பவுல் தட்டிக் கேட்டார்! (1கொரி.11:18-22). கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, தங்கள் ஜீவியத்தில் ரட்சிப்பின் மாறுதலடைந்தவர்களை மாத்திரமே சபையின் அங்கத்தினராக அப்போஸ்தலர்கள் சேர்த்துக்கொண்டு வந்தார்கள் (அப்.2:47). அவர்கள் தங்கள் இரட்சகரை, உலகத்திற்கு வெளிப்படுத்தும் சாட்சிகளாகவும், தேவ ராஜ்யத்திற்காக உழைக்கிறவர்களாகவும் இருக்கும்படி, உன்னத ஆவியினால் அபிஷேகம் பெற்றார்கள்! புதிய ஆத்துமாக்கள், அநேகர்

கர்த்தரிடமாய் சேர்க்கப்பட்டார்கள். மிஷன்களோ, தலைமை ஆலயங்களோ அன்று கிடையாது! கிறிஸ்துவைச் சொந்தமாக்கிக் கொண்ட விசுவாசிகளே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானார்கள்!

**ஆண்டவரை ஏற்றுக்கொண்டவர்கள் உத்தம சீஷர்களாய் முதலாவது கர்த்தரிடம் சேர்ந்து, பின்பு விசுவாசிகளிடையே ஒருவரையொருவர் அன்புகூரும் மக்களாய், சபை அந்தஸ்துடன் சேர்க்கப்பட்டார்கள். பொது ஜனங்கள், இவர்களிடம் காணப்பட்ட மாறுதலினிமித்தம் இவர்களை "இயேசுவின் சீஷர்கள்" என அழைத்து மேன்மைப்படுத்தினார்கள்! (அப்.5:13).**

எருசலேமிலிருந்த சபைக்கு மிகுந்த துன்பமுண்டானபோது, சபையார் பல இடங்களிலும் சிதறுண்டுபோனார்கள். இப்படி "ஜீவ தணலாய்" சிதறுண்டுபோனவர்களாலே ஆங்காங்கே ஏராளமாய் சபைகள் உண்டாயின. "யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்குமுள்ள சபைகள் சமாதானம் பெற்று, பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்துபெருகின" (அப்.9:31). அந்த ஆதி சபைகளுக்கு இருந்த லட்சணங்களை தெளிவாக காண்கிறோம். திருச்சபை உண்டான காலந்தொடங்கி அதற்கு உள்ளும் புறமும் எத்தனையோ விரோதங்களும் ஆபத்துக்களும் நேரிட்டிருந்தும், **'பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை'** என்று ரட்சகர் சொன்னபடி அந்த சபைகள் இந்நாள்வரை தேவ லட்சணத்தோடு நிலைநிற்கிறது!

காலம் செல்லச் செல்ல சபையின் காரியம் வேறுவிதமாயிற்று. ஆவிக்குரிய சபை கலப்புள்ளதாயிற்று! சகலத்துக்கும் பொருளாதார ரீதியில் ஆண்டவரையே நம்பிப் பற்றிக்கொண்டிருந்த சபை, தலைமை பீட சபைக்கு உட்பட்டு, தனக்கு வேண்டிய பராமரிப்பையும், மானியத்தையும் பெற்றுக்கொண்டது! அன்று தொடங்கிய சரிவு, இன்று வரை ஊழியர்களுக்கு சம்பளமும், சகல சௌகரியங்களும் ஏற்பட்டிருந்தபடியால்.... அன்று தொடங்கி இன்றுவரை அநேகர் **ஊழியத்தை ஓர் லாப தொழிலாக** நாடினார்கள். 'கத்தீட்ரல்' சபை போன்ற தலைமை சபைகள் உலகில் செல்வாக்குள்ளதாயிற்று. ஆம், இப்போது பெரும்பான்மையான சபையை உலகம் ஆண்டு கொண்டது. பொதுவாகவே புறம்பான ஆடம்பரங்களில் மனுஷருக்கு அதிகப் பிரியம். அநேகர் பற்பல நோக்கங்களோடு சபையில் சேர்ந்தார்கள். ஆ, இந்த சபையா? அங்கு, நல்ல பிரசங்கம் உண்டே? அவர்களின் தலைமை ஆலயம் செல்வாக்கு கொண்டதே? என பேரும் பிரஸ்தாபமும் உலகத்தைப்போலவே உள்ளே பிரவேசித்தது!

*இதுயாவும், எவ்வளவாயிருந்தபோதிலும், சபையின் ஜீவனாகிய கர்த்தர் அங்கேயில்லாவிட்டால் அந்தச் சபை என்னத்திற்காகும்?*

லவோதிக்கேயா சபை தன்னைக் குறித்து: 'நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லை' என்றும் பெருமை பாராட்டினது. ஆனால் அது கிறிஸ்தற்ற சபையாயிருந்தது! ஏனென்றால் ஆண்டவர் அந்தச் சபையைப் பார்த்து: "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசிப்பேன்" என்கிறார். அவர் சபைக்குள்ளிருந்தால் வெளியே நின்று தட்டவேண்டியதென்ன? லவோதிக்கேயா சபை தன் அக்கிரமங்களையும் பாவங்களையும் சீர்கெட்ட நிலைமையையும் உணரவில்லை. ஆகையால் ஆண்டவர் அதைக் கடிந்துக்கொண்டு: "நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியால், நான் என் வாயினின்று உன்னை வாந்தி பண்ணிப்போடுவேன்" என்றார். நம் தென் இந்தியாவிலுள்ள சபைகளின் நிலைமை என்ன? சபைகளில் அங்கங்கே உத்தம விசுவாசிகள் இருந்தபோதிலும், கிறிஸ்தற்ற கிறிஸ்தவர்களும் திரளாமாயிருக்கிறார்களே! இவர்கள் எத்தனை வருஷம் சபைகளில் இருந்தபோதிலும், ஆராதனைகளுக்குப் போனபோதிலும், கிறிஸ்துவை ஜீவனாக ஏற்றுக்கொள்ளாததால், இவர்கள் ஜீவியத்தில் மாறுதல் இல்லை. சகல சங்கடங்களுக்கும் குழப்பங்களுக்கும் அடிதடிகளுக்கும் காரணம் இவர்கள்தான்! கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமலும், அவர் மூலமாய் ரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளாமலும் இவர்கள் எதற்காக சபையிலிருக்கிறார்கள்? இப்படிப்பட்டவர்கள் கூடிவருகிற சபைகள் வீணான சபைகளாகும். 'இவர்கள் சபையாகக் கூடுவதை ஆண்டவர் சகிக்கமாட்டேன்' என்கிறார்.

*கிறிஸ்தவன் என்ற பெயரில் கிறிஸ்து அல்லாதவர்களாகவும், சபை என்ற பெயரில் பகை உணர்வு கொண்டவர்களாகவும்.... கிறிஸ்துவுக்கு அங்கே இடமில்லை என்ற நிலையில் சகலமும் வீணாகும்!*

இதுபோன்றவர்களின் கூட்டம் வெற்றுக் கூட்டம் அல்லவா? இவர்களுக்கு சபை என பெயர் சூட்டுவதும் அலங்கோலமல்லவா? சிறு குடிசைக் கோவிலானாலும் அங்கே ஆராதிக்கும் ஏழைகள் கிறிஸ்துவின் சீஷர்களாகவும், அவர்களை நடத்தும் போதகர்கள் உத்தம அடியார்களாயும் இருப்பார்களானால், அந்த சபை ஒரு சிறிய மோட்சம் போலிருக்கும்! ஆ, அதுவே கிறிஸ்துவின் சபை!

– பரமானந்தம் ஐயர்

## இரட்சிக்கப்பட்டவர்களிடம் காணப்படும் நிர்விசார வாழ்க்கை!

இயேசு, கிறிஸ்தவர்களுக்காக மரிக்கவில்லை! பாவிகளுக்காகவே மரித்தார் என்ற உணர்வை, ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவன் நன்றாய் விளங்கியிருந்தால் மாத்திரமே, அவன் இரட்சிக்கப்பட முடியும். கிறிஸ்தியான், தன் இரு கைகளையும் உயர்த்தி என்னிடம் நற்கிரியைகள் ஒன்றுமில்லை அல்லது ஓய்வுநாள் போன்ற ஆசரிப்புகளை கைக்கொண்ட நீதிமானாயும் வரவில்லை! என கதறியே மெய்யான இரட்சிப்பைக் கண்டடைந்தான். அதனிமித்தமே **'இரட்சிப்பின் சந்தோஷம்'** கிறிஸ்தியானின் உள்ளத்தை நிறைத்தது. இரட்சிப்படைந்து உள்ளே பிரவேசித்த கிறிஸ்தியானை மூன்று தூதர்கள் சந்தித்தார்கள். ஒரு தூதன் "உனக்கு சமாதானம் உண்டாவதாக!" எனக் கூறினார். இரண்டாவது தூதன் கிறிஸ்தியானின் அழுக்கான வஸ்திரங்களை அகற்றி "கிறிஸ்துவின் நீதியின் ஆடையை" அவனுக்கு உடுத்துவித்தான். மூன்றாவது தூதன், அவனுடைய நெற்றியில் ஒரு முத்திரையைப் பதித்து "நீ தேவனுக்குச் சொந்தம்" எனக் கூறினான். பிறகு பரலோகத்திற்குள் பிரவேசிக்கும் அனுமதி பத்திரச் சுருளை அவனுக்குக் கொடுத்தான். "இப்போது நீ பரலோகத்திற்குள் போகலாம்" ஆகிலும், இந்த சுருளை நீ எப்போதும் பற்றியிருக்க வேண்டும்! இல்லையென்றால் பரலோகத்தின் உள்ளே நீ பிரவேசிக்க இயலாது!" என எச்சரித்தான்.

**அந்த சுருள் "இரட்சிப்பின் நிச்சயம்" என்பதேயாகும். ஆம், பாவம் மன்னிக்கப்பட்டது என்பது மாத்திரமல்ல.... பாவம் மன்னிக்கப்பட்டது என்ற நிச்சயத்தையும் நாம் பெற்றிருக்க வேண்டும்!**

நம் பாவம் மன்னிக்கப்பட்டிருந்தாலும், அதற்குரிய நிச்சயத்தை நாம் பெற்றிருக்காவிட்டால், நாம் ஒருபோதும் ஆவிக்குரிய வளர்ச்சி அடைந்திட முடியாது. அந்த நிச்சயத்தை ஒரு மனிதன் மூலமாய் பெறுவதல்ல. அந்த நிச்சயத்தை **தேவனிடத்தில்** நீங்கள் கேட்டே பெற்றுக்கொள்ள வேண்டும்! அந்த நிச்சயத்தை பெற்ற அடுத்த கணமே அவனுடைய பெயர் 'மோட்ச பயணி' என்பதற்குப் பதிலாய் "கிறிஸ்தவன்" என்ற மறுபெயர் பெற்றான். அப்போஸ்தலர்.11:26 - ம் வசனம் கூறுகிறதைப்போல், **அன்று சீஷர்கள் மாத்திரமே கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டார்கள்!** இன்றோ, பாவ வாழ்க்கையில் வாழ்பவர்கள் கூட தங்களை கிறிஸ்தவன் என கூறிக் கொள்கிறார்கள். ஆனால், கிறிஸ்தியான் மெய்யாகவே மறுபடியும் பிறந்தபடியால் 'நானொரு கிறிஸ்தவன்' என ஆர்ப்பரித்து பாடி மகிழ்ந்தான்!

*கிறிஸ்தவ பயணமோ நீண்டதோர் பயணமாகும்! தொடர்ந்து பயணம் செய்த கிறிஸ்தியான் மூன்று மனிதர்களை சந்தித்தான். அவர்கள் 3 பேருமே ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். அவர்கள் கால்களில் சங்கிலி மாட்டப்பட்டிருந்தன. இவர்களில் ஒருவனுடைய பெயர் 'வஞ்சிக்கப்படக்கூடியவன்!' இரண்டாவது நபரின் பெயர் 'சோம்பேறி!' மூன்றாவது நபரின் பெயர் 'இனி ஒரு குறைவுமில்லை!' என எண்ணிக்கொண்டவன். இந்த மூவரும், இன்றைய கிறிஸ்தவர்களின் மனநிலையை வெளிப்படுத்துகிறார்கள். எளிதில் வஞ்சிக்கப்படுபவன் "இயேசுவின் நாமத்தில் ஒருவர் அற்புதம் செய்தால், அவர் கூறும் உபதேசங்கள் அனைத்தையும் உடனே நம்புகிறவர்கள்!" இன்று சிலர் 'மேஜிக்ஷோவில்' காண்பதைப் கூட அப்படியே நம்புவார்கள்.... இவர்களே எளிதில் வஞ்சிக்கப்பட கூடியவர்கள். அடுத்தவனோ சோம்பேறித்தனத்தால் பாதிக்கப் பட்டவன்.* **ஒழுங்கின் கட்டுப்பாட்டின்படி வாழாத சோம்பேறி!** *ஆவிக்குரிய ரீதியான சோம்பேறித்தனத்தில் "நான் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டேன்! இனி நான் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை" என்ற மனநிலை கொண்டவர்கள். இவனும் தனக்கு தானே சிறைச்சங்கிலி பூட்டப்பட்டிருந்தான். மூன்றாவது நபர் "எனக்குள் எல்லாம் சரியாய்தான் இருக்கிறது, நான் செய்வது சரிதான்" என்ற மனப்பான்மை கொண்டவன்.*

உணர்வுள்ள இருதயம் கொண்டு "உமக்கு வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ? என்னை சோதித்தருளும்!" என தாவீது கூறிய நல்ல உணர்வை இழந்தவன்.

*பல வருடம் சபையில் இருப்பவர்கள் கூட "எனக்குள் ஒரு குறைவும் இல்லை, எல்லாம் சரியாய்தான் செய்கிறேன்" என கூறுபவர்கள், இந்த மனுஷன் கிடப்பதைப்போலவே வளர்ச்சியின்றி கிடப்பார்கள். இதுபோன்ற மனநிலை கொண்ட 3 - பேரையும் கிறிஸ்தியான் உலுக்கி எழுப்பிவிட்டான். நாமும் அவ்வாறாகவே இதுபோன்ற 3 - வித மனநிலையை கொண்டவர்களை உலுக்கி எழுப்பி "உங்களின் உதாசினமான வாழ்க்கை பெரும் அபாயம்!" என எச்சரிக்கை வேண்டும். என்னதான் கிறிஸ்தியான் அவர்களை உலுக்கி எச்சரித்தாலும், அவர்களோ அவனது எச்சரிப்புகளை எல்லாம் கேட்டுவிட்டு "அதெல்லாம் ஒன்றும் எங்களை பாதிக்காது" என அலட்சியப்படுத்தி மீண்டும் படுத்து உறங்கி விட்டார்கள்!*

*– மோட்ச பயணம் (சகரியா பூணன் விளக்க உரை)*

## டோனாவூர் ஆசிரமத்தில், கல்வாரி அன்பை கற்றேன்!

**ஒ**ரு முறை, எங்கள் டோனாவூர் ஆசிரமத்தில் சிறுவயது முதல் ஆதரவற்ற நிலையில், பல வருடங்களாய் எங்களோடு வாழ்ந்த பெண் ஒருத்தி **நன்றி உள்ளம் இழந்து,** ஆசிரமத்திற்கு பல தீங்கு செய்ய முற்பட்டாள்! அவளை அழைத்து, **நீ தீங்கு செய்வது "இறைவனின் இல்லம்"** என்பதை மறவாதே! என எச்சரித்து அனுப்பினேன். ஆனால் அவளோ, மனம் புண்பட்டு இன்னும் அதிகமாய் தீங்கு செய்தாள்! அதுபோதாதென, என்னையும் புறமுதுகிட்டு தீமைகள் பல பேசினாள்! அவளை சிறுவயது முதல் நான் தோளில் சுமந்து ஆதரித்த அன்பை சற்று சிந்தித்துப் பார்த்தேன்! ஆனால் இன்றோ, அவள் ஏதோ ஒரு தன்னம்பிக்கையிலும், தன் சொந்த துர்க்குணத்திலும் ஆசிரமத்திற்கே தீங்கு செய்து, அடிக்கடி "ஆசிரமத்தை விட்டு ஓடிவிடுவேன்!" என பயமுறுத்திய வார்த்தைகளும் என் உள்ளத்தில் சோகத்தைத் தந்தது!

"ஓ கர்த்தாவே, இவளைக் குறித்த காரியம் என்ன?" என என் ஆண்டவரிடம் வேண்டினேன். அந்த வேளையில் "தெய்வீக அன்பு" என் உள்ளத்தில் பளிச்சிட்டது! நான் பெற்ற தெய்வ அன்பின் வெளிச்சம் இதுதான்: ஒரு அன்புள்ள தகப்பனுடைய 2 - மகன்களில் ஒருவன் 'கெட்ட குமாரனாய்' மாறினான். அவனை மீட்க, அந்த தகப்பன் வெகுவாய் பாடுபட்டான்! ஆனால் அவனோ, தன் தகப்பனின் தயவை காலில் மிதித்து "நான் வீட்டை விட்டு வெளியே போகிறேன்" என துணிகர துரோகம் கொண்டான். "எனக்குரியதை பிரித்துக்கொடும்!" என பிரிவினை வார்த்தைகளைக் கொட்டினான்!

அந்த நல்ல தகப்பன் "துரோகிகளுடைய வழி கடினமானது" என வேதம் கூறுவதை நினைவுகூர்ந்து, அந்த கடின வழியை கெட்ட குமாரன் உணர்வதே நல்லது! என முடிவு செய்து, தன் வீட்டை விட்டு அவன் செல்ல தகப்பன் கதவை திறந்து விட்டார்!

அது மாத்திரமல்ல "இன்று முதல் அவன் மரித்தான்!" எனக் கூறி தன் நெஞ்சை திடப்படுத்திக் கொண்டார்!! ....இந்த வெளிச்சத்தையே இந்த வேளையில், நானும் பெற்றேன்:

நான் ஆழமாய் உணர்வடைந்து "ஓ கர்த்தாவே, நன்றி இழந்த அந்த பெண் 'துரோகிகளுடைய வழி கடினமானது!' என்ற உம் வசனம் அவளில் நிறைவேற நான் தடையாகவும்.... எனக்கும் என் ஆசிரமத் திற்கும் கெட்ட பெயர் ஏற்படுமே என்ற மனகிலேசத்தில் "**தேவ நிபந்தனைக்கு**" அவளை விட்டுவிடாதும் இருந்த எனது மனுஷீக அன்பிற்கு வருந்துகிறேன்..... எனக்கோ, அந்த கல்வாரி அன்பே வேண்டும்! .... இனி, **உம் அன்பில் செயல்படுவேன்!!**" என தீர்மானித்தேன்.

– ஏமி கார்மைக்கேல்

## ஐக்கியத்தின் பேரின்பமே, நமது சபை!

*பழைய ஏற்பாட்டு ஆசரிப்புக் கூடாரத்தின் "திரைச்சீலைக்குப் பின்னால்" தேவ சமூகம் இருந்தது. வருடத்திற்கு ஒருமுறை மாத்திரமே பிரதான ஆசாரியன் தன்னை சுத்திகரித்து, திரைச்சீலையை கடந்து செல்வார். இன்றோ தேவனோடு ஐக்கியப்படுவதற்கு, இந்த திரைச்சீலை வழியாய்* **'ஓர் புதிய மார்க்கத்தை** *அல்லது வழியை' இயேசு திறந்து வைத்தார் என எபிரெயர்.10:19 கூறுகிறது. அதாவது, பழைய ஏற்பாடு ஆசரிப்பு கூடார 'திரைச்சீலை' அல்ல....* **"மாம்சமாகிய திரை"***வழியாய் பிரவேசிக்கும் ஓர் "புதிய மார்க்கம்." இயேசு நம்மைப் போன்ற மாம்சத்தில் வெளிப்பட்டு, அந்த மாம்சத்தில் குடி கொண்டிருக்கும் பாவ இச்சைகளை, ஒவ்வொரு சோதனை நேரத்திலும் 'சிலுவையில் அறைந்து' ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்! (ரோமர்.8:3). அதன் விளைவாய் திரைச்சீலை இரண்டாக கிழிந்து உண்டான வழியில், பிதாவின் பேரின்ப ஐக்கியம் பெற்று "நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்றார்!*

இயேசுவைப் போலவே, சோதனை வேளையில், தேவன் தரும் வெளிச்சத்தில், நம் மாம்சத்தில் மறைந்திருக்கும் நம் பாவ இச்சைகளை *"சிலுவையில் அறைந்து"* 'திரை கிழிந்து' உண்டான மார்க்கத்தின் வழியாய் நாமும் தேவனோடு ஐக்கியம் பெற முடியும்!

*புதிய உடன்படிக்கை தெய்வ அன்பின் ஐக்கியத்தின் பாக்கியம், இரு கற்பனைகள் கொண்டது! முதல் கற்பனையில், நாம் தேவனோடு ஐக்கியம் காண்பதே முதல்-பிரதானம்! அதை கண்டடைந்தவன் மாத்திரமே, இரண்டாவது கற்பனையான "ஒருவரோடொருவர் கொண்ட ஐக்கியத்திற்குள்" பிரவேசித்திட முடியும். எப்படி பாவ மாம்சம்* **'திரைச்சீலையாய்'** *நம்மை தேவனைவிட்டு பிரித்ததோ.... அப்படியே, "பகை"* **'நடுச்சுவராய்'** *ஒருவரோடு ஒருவர் ஐக்கியத்திற்கும் தடையாய் நிற்கிறது! பாவத்தை இயேசு தன் மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக தீர்த்ததுபோலவே, "பகையையும்" தம்முடைய மாம்சத்திலே ஒழித்தார்! "பிரிவினை நடுச்சுவரை" தகர்த்தார்! இங்கும் 'பகை' சிலுவையில்தான் கொல்லப்பட்டது! (எபே.2:14-16). இப்போது நடைபெறும் அற்புதமே புதிய உடன்படிக்கையில் நாம் பெறும் பாக்கியம்:*

ஆம், 'சமீபமாய்' நம்மோடு ஐக்கியமில்லாமல் தள்ளி நிற்பவருக்கும், 'தூரமாய்' விலகி தள்ளி நிற்பவருக்கும் "பகையாகிய நடுச்சுவர் என்னிடம் இல்லை!" என அறிவிக்கும் இந்த பாக்கியம், *சிலுவையின் வழி செல்லும் யாவருக்கும் சொந்தம்!!*

*சிலுவையின் வழியில் தேவனோடும், தேவன் நமக்குத்தந்த யாவரோடும் ஐக்கியமாய் வாழ்வது போன்ற பேரின்பம் வேறில்லை! அது போன்ற குடும்பம், அதுபோன்ற சபை! பரம சிலாக்கியம் பெற்றதென்றே கூற வேண்டும்.... ஆமென்.*

*– T.ரத்தினகுமார்*

# ரிச்சர்ட் உம்ரண்ட்,

## கம்யூனிச சித்திரவதை, கிறிஸ்துவின் நறுமணத்தையே தந்தது!

(1909 –2001)



கம்யூனிச நாடான ருமேனியாவின் பார்லிமெண்ட கூட்டத்திற்கு 4000 கிறிஸ்தவ போதகர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அந்த கூட்டத்தில் தலைமை தாங்கிய அதிபதி, “இங்கு கூடியுள்ள 4000 போதகர்களும், இந்த மேடையில் ‘கம்யூனிசமும், கிறிஸ்தவமும் அடிப்படை ரீதியில் சமமானது’ என அறிக்கையிட அழைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவித்தார். தேவமனிதர்களாய் விளங்க வேண்டிய அந்த போதகர்கள், தங்களின் உயிர் காப்பதற்காக, **கம்யூனிசத்தை கிறிஸ்துவுக்கு சமமாய் புகழ்ந்தனர்.** கம்யூனிச அதிகாரிகள் கரகோஷம் எழுப்பிய அந்த வேளை, “கிறிஸ்தவ ஊழியர்கள் கிறிஸ்துவின் முகத்தில் காரி உமிழ்ந்த” சோகமாய் இருந்தது.

அந்த கூட்டத்தில், போதகர் ரிச்சர்டு உம்ரண்டின் மனைவி **சபீனா** தன் கணவரைப் பார்த்து “அன்பான ரிச்சர்ட் நீங்கள் எழுந்து நின்று கிறிஸ்துவின் முகத்தில் வீசப்பட்ட அவமானத்தை துடைத்து விடுங்கள்!” என மெல்ல கூறினார்கள். அதற்கு போதகர் ரிச்சர்டு “நான் எழுந்து பேசினால் உன் கணவனை நீ இழப்பாய்” என கூற, அதற்கு பதிலாக கூறிய சபீனா “கிறிஸ்துவை மறுதலிக்கும் ஒரு கோழையான கணவனை நான் விரும்பேன்!” என பதிலுரைத்தாள். அந்த மேடையில், போதகர் ரிச்சர்டு உம்ரண்டு நின்று “சிநேகிதர்களே, மண்ணின் வலிமையை துதிக்க மறுப்பதும், நம் சிருஷ்டிகரும் இரட்சகருமான கிறிஸ்து சிலுவையில் நம் பாவங்களுக்காக மரித்த **அவர் ஒருவரையே மகிமைப்படுத்துவதும் நம் மேல் விழுந்த தலையாய கடமை!**” என கூறியதும் அந்த பார்லிமெண்ட அவையில் பேரமைதி நிலவியது. இந்த நிகழ்ச்சி உலகமெங்கும் வானொலியில் பரப்பப்பட்டிருந்தது. கொதித்தெழுந்த கம்யூனிச தலைவர் “வானொலி இணைப்பை உடனே அணைத்துபோடுங்கள்” என கோபகனல் கொண்டார். 1948 - பிப்ரவரி 29ம் தேதி ரிச்சர்டு உம்ரண்ட் கம்யூனிச வீரர் களால் கைது செய்யப்பட்டு, பூமியின் கீழ் 30 அடி ஆழத்தில் உள்ள ஒரு தனி அறையில் அடைக்கப் பட்டார். அங்கு அவருக்கும், உத்தம கிறிஸ்தவர்களுக்கும் தரப்பட்ட கொடுமை சொல்லிமாளாது!

நாங்கள் சிறையில் இருந்தது போன்ற எண்ணமே வரவில்லை. நாங்கள் கொடூரமாய் தாக்கப்பட்ட வேளையில் ஸ்தேவானைபோலவே இருந்தோம். அவன் கல்லெறியப்பட்ட போது.... அந்த கொலைக்காரர்களை அவன் காணவில்லை! அந்த கற்களையும் அவன் காணவில்லை! ஆனால், பரலோகம் திறந்திருந்ததை கண்டான்! பிதாவின் வலது பாரிசத்தில் இயேசு நின்று கொண்டிருப்பதையும் கண்டான்! அதுபோலவே, நாங்களும் கம்யூனிச கொடூரவாதிகளை காணவில்லை.... நாங்களோ தூதர்களால் சூழப்பட்டு தேவனோடு இருந்தோம்! இதைவிட இன்னும் அற்புதமாய், எங்களைத் துன்புறுத்திய கம்யூனிச வீரர்களை மிகுந்த அன்போடு காண துவங்கினோம். எவ்வளவு அதிகம் எங்களை துன்புறுத்தினார்களோ அவ்வளவு அதிகம் அவர்கள் மீது இரக்கமும் அன்பும் கொண்டோம். ஆம், அன்பு ஒன்றே எந்த தீவிரவாதத்தையும் ஜெயித்திட முடியும். சுமார் 14 - ஆண்டு கொடும் சிறைவாசம் பிறகு, சிறையிலிருந்து வெளியே வந்தார்! உம்ரண்டு கூறியதை போலவே, அந்த அன்பு ஜெயித்து, 1991 - ம் ஆண்டு கொடிய கம்யூனிசம் சோவியத் யூனியனில் உடைந்து சிதறி, கிறிஸ்துவின் நறுமணம் இப்போது அங்கே மலர்ந்துவிட்டது!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

# இளமை காலத்தை, நித்தியத்தோடு இணைத்திடுங்கள்!

காலத்தை நாம் ஒருபோதும் திரும்பப்பெற இயலாது. அதேபோன்று நாம் ஒருபோதும் இளமைக்குத் திரும்பப் போவதில்லை. காலம் என்ற மணற்பொடிகள் மணற்கடிகாரத்தில் நிற்காமல் தொடர்ந்து விழுந்து கொண்டேயிருக்கிறது. நாம் பேசிய வார்த்தைகளையும், நாம் செய்த செயல்களையும் மீண்டும் நாம் ஒருக்காலும் அடையப்போவதில்லை. இதனிமித்தம் நாம் பேசும் பேச்சைக்குறித்தும் செய்யும் செயல்களைக்குறித்தும் எத்தனை விழிப்புடனிருக்க வேண்டுமென்று பாருங்கள். காலத்திற்கு ஒரு துவக்கமிருப்பதைப்போன்று அதற்கொரு முடிவும் உண்டு. சாயங்காலமும், விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று என்று ஆதியாகமம்.1:5 கூறுகின்றது. மெய்தான் காலத்திற்கொரு முடிவு உண்டு! காலமானது, மனிதவர்க்கத்தின் சரித்திரத்தோடு இணைந்துள்ளது.

நம்மனைவரின் காலமும், முடிவில்லா நித்தியத்துடன் ஒரு நாள் ஒன்றறக் கலந்துவிடும். மனிதனின் சிறப்பான சிந்தனைகளில், இந்த அரிய சத்தியமும் இடம் பெற்றிருத்தல் மிகவும் அவசியமாகும். **காலம் நித்தியத்துடன் சங்கமமாகும்!** மரணம் நம் ஒவ்வொருவரையும் மேற்கொள்ளும்போது நமது காலமும் செயலிழந்து நின்றுவிடுகின்றது. கடிகாரத்தின் டிக், டிக் என்ற ஒவ்வொரு துடிப்பும்..... கடிகாரமற்ற நித்தியத்திற்குள் நம்மை கொண்டு சென்று கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இரவும், ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு ஆண்டும் முற்றுப்பெற்று வருகின்றது. ஆனால் இவ்வுலகிலிருந்து நாம் கடந்து செல்லும்போது, அளவிடப்படாத கால நிலைக்குள் நமது ஆத்துமா பிரவேசிக்கின்றது. முடிவில்லா நித்தியத்தில் காலத்தைக் காட்டக் கடிகாரங்கள் கிடையாது. அனைத்து மனுக்குலமும், மோட்சம் அல்லது நரகம் ஆகிய இரண்டில் ஏதாவதொன்றினுள் நித்தியத்தில் பிரவேசித்துத்தான் ஆகவேண்டுமென்று பரிசுத்த வேதாகமம் மிகத்தெளிவுடன் விளக்குகின்றது. மனிதனின் சரீரமானது காலப்போக்கில் அழிந்துபோகும். ஆனால், அவனின் விலையேறப்பெற்ற ஆத்துமா முடிவில்லா தன்மையுடையது. சில மனிதர்கள் **நரகம் என்று ஒன்றில்லை** என்று விதண்டவாதம் புரிகின்றனர். ஆனால், எல்லாவற்றையும் அறிந்த தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து **நரகம் என்று ஒன்று உள்ளது** என்று கூறி மக்களை அதினின்று தப்பியோடும்படி கடுமையாக எச்சரித்தார். நரகம் உண்டென்பதற்குத் தேவனுடைய வார்த்தைகளே நமக்கு ஆதாரம். ஆன்மாவே! ஓ வாலிபனே! தேவனுடைய வார்த்தைகளை நீ அப்படியே ஏற்றுக்கொண்டு அவருடைய எச்சரிப்பின் குரலுக்குச் செவிசாய்த்து, அவரின் இரட்சிப்பிற்காக அவரை நோக்கி கூப்பிட்டு, "இந்த காலத்தை, பிரயோஜனப்படுத்திக்கொள்!"

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.